**உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறை**

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திருமதி.ச.செல்வி. எம்.சி.ஏ., | ஆணையாளர், |
| உதவி இயக்குநர், | இராமேஸ்வரம் நகராட்சி, |
| உள்ளாட்சி நிதித்தணிக்கை, | இராமேஸ்வரம். |
| இராமநாதபுரம் | இராமநாதபுரம் மாவட்டம். |

ந.க.எண்.அ1/ 870 /2022, நாள். 07.01.2023

ஐயா,

பொருள் : தணிக்கை – இராமேஸ்வரம் நகராட்சி – 2021–2022–ம் ஆண்டு வருவாய் மற்றும் மூலதனநிதி – மீதான ஆண்டுத் தணிக்கை அறிக்கை மற்றும் தணிக்கை குறிப்பு வெளியிடுவது.

பார்வை: 1.அரசாணை எண்.1722/ஸ்தல நிர்வாகம், நாள்;15.10.1960.
2.அரசாணை எண்.38, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள்.22.03.2020.
3.அரசாணை எண்.87, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள்.05.03.2002.
4.அரசாணை நிலை எண்.240 (உள்ளாட்சி நிதி) துறை, நாள்.24.08.2016.
5.தமிழ்நாடு உள்ளாட்சி நிதி தணிக்கை சட்டம் 2014.
6.தமிழ்நாடு உள்ளாட்சி நிதி தணிக்கை விதிகள் 2016.

----------

பார்வை 2–ல் கண்டுள்ள அரசாணைகளின்படி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 122–ந்படி உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறைக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்திற்கு இணங்க இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம் நகராட்சியின் 2021–2022–ம் ஆண்டு கணக்குகளுக்கான தணிக்கை பார்வை 5–ல் காணும் தமிழ்நாடு உள்ளாட்சி நிதி தணிக்கை சட்டம் 2014–ந்படி மேற்கொள்ளப்பட்டு அதற்கான தணிக்கை அறிக்கை மற்றும் தணிக்கை குறிப்பு ஒரு நகலுடன் அனுப்பி வைக்கப்படுகிறது. பார்வை 6–ல் காணும் தமிழ்நாடு உள்ளாட்சி நிதி தணிக்கை விதிகள் 2016 விதி வ்ண 13(1) 11–ம் பிரிவின்படி இத்தணிக்கை அறிக்கை கிடைக்கப்பெற்ற இரண்டு மாதங்களுக்குள் அதில் குறிப்பிடப்பட்டுள்ள குறைகள் சரி செய்ய நடவடிக்கை எடுத்து, எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவர அறிக்கை ஒன்றுடன் சேர்த்து நகராட்சி மன்றத்தின் ஒப்புதல் பெற்று தீர்மான நகலுடன் இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இத்தணிக்கை அறிக்கை மற்றும் தணிக்கைக் குறிப்பு கிடைக்கப்பெற்றமைக்கு ஒப்புகை அனுப்பி வைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது,

உதவி இயக்குநர்
உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை
இராமநாதபுரம்.

நகல்:

1. சென்னை உள்ளாட்சி நிதி தணிக்கை இயக்குநர் அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.
2. மதுரை உள்ளாட்சி நிதி தணிக்கை மண்டல இயக்குநர் அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.

**AUDIT CERTIFICATE**

I have examined the Receipts and Payments Accounts / Income and Expenditure Accounts for the year ended 31st March 2022 and the Balance Sheet as on 31.03.2022 for Revenue and Capital Fund have obtained all information and explanations that I have required and subject to the observations in the Audit Report. I Certify as a result of my audit, that in my opinion these accounts and balance sheet are properly drawn up so as to exhibit true and fair view of these state affairs of the **RAMESWARAM MUNICIPALITY** according to the best of information and explanation given to me and as shown by the books of the Organisation.

For DIRECTOR OF LOCAL FUND AUDIT

**இருப்பு இணக்கச் சான்று சரிபார்த்தமைக்கான சான்று :**

ரொக்கப் பதிவேட்டின் படியான இறுதி இருப்புகளுக்கான விவரங்கள் தணிக்கைக்கு அளிக்கப்பட்ட இறுதி இருப்பு இணக்கச் சான்றுகள், பதிவேடுகள் மற்றும் வங்கி கைச்சாத்துகளுடன் ஒப்பு நோக்கப்பட்டு 31.03.2022 அன்றைய இறுதி இருப்புகள் கருவூலக / வங்கி கைச்சாத்துகளுடன் இணக்கம் செய்யப் படுவதற்கான இணக்கச் சான்று தணிக்கையில் சரிபார்க்கப்பட்டன.

31.03.2022 அன்றைய வங்கி இறுதி இருப்பினை உறுதி செய்வதற்கான வங்கி மேலாளரின் கையொப்பத்துடன் கூடிய வங்கி கைச்சாத்து தணிக்கைக்கு அளிக்கப்படவில்லை.

உதவி இயக்குநர்
உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை
இராமநாதபுரம்.